செய்திப் பணிப்பாளர்/செய்தி ஆசிரியர் 22.02. 2021

# செய்தி வெளியீடு

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100):சனவரி 2021**

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2021 சனவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்(பதில்), தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 3.7% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2020 திசெம்பர் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 4.6% ஆக இருந்தது. 2021 சனவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 2.7%, 1.0% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 7.6% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2020 சனவரி மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புக்கள் முறையே 6.0%, 1.7% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2020 திசெம்பர் மாதத்தில் பதிவாகிய 141.2 இருந்து 2021 சனவரி மாதத்தில் 142.1 வரை அதிகரித்துள்ளது. இது, 2020 திசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 0.9 சுட்டெண் புள்ளி அல்லது 0.6 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.48% இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதி 0.14% இனாலும் அதிகரித்தமையேயாகும்..

உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்புக்கள் அரிசி, தேங்காய், பச்சை மிளகாய், மரக்கறி, சின்ன வெங்காயம், புதிய மீன், புதிய பழங்கள், மஞ்சள்தூள், தேங்காய் எண்ணெய், புளியம்பழம் மற்றும் செத்தல் மிளகாய் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் விலை குறைவுகள் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, முட்டை, மரவள்ளிக்கிழங்கு மற்றும் கோழி இறைச்சி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 சனவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு பிரதான காரணம், 'சுகாதாரம்'(தனியார் மருத்துவ சேவைகளுக்கான கட்டணங்கள், தனியார் வைத்தியசாலை அறை கட்டணங்களுக்கான கொடுப்பனவு), 'தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு'(வீட்டு வேலைக்காரர் கூலிகள்), 'வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்'(பராமரிப்புக்கான பொருட்கள்), 'போக்குவரத்து'(டயர், டியுப் மற்றும் உதிரிப்பாகங்கள்), 'ஆடையும் காலணியும்', 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்' மற்றும் 'கல்வி' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், 'அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்'(பாக்கு) பிரிவு பொருட்டு விலைக் குறைவு பதிவாகியது. அதேநேரம், 'தொடர்பாடல்', 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2021 சனவரி மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2020 திசெம்பர் மாதத்தில் பதிவாகிய 4.7% இருந்து 4.2% வரை குறைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| 2020 | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |
| | பெப்ரவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 |
| | மார்ச் | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 |
| | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |
| | ஓகஸ்ட் | 137.8 | 139.9 | 0.4 | 0.4 | 6.2 | 4.6 |
| | செப்ரெம்பர் | 138.9 | 140.4 | 0.8 | 0.4 | 6.4 | 4.8 |
| | ஒக்ரோபர் | 139.1 | 140.5 | 0.1 | 0.1 | 5.5 | 4.5 |
| | நவம்பர் | 139.8 | 140.6 | 0.5 | 0.1 | 5.2 | 4.5 |
| | டிசம்பர் | 141.2 | 140.5 | 1.0 | -0.1 | 4.6 | 4.7 |
| 2021 | ஜனவரி | 142.1 | 141.0 | 0.6 | 0.4 | 3.7 | 4.2 |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்